Director DSE
6.23 pm
28/01/26
Nirmal

(28)

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6.

ந.க.எண்.000720/பிடி/இ2/2026 நாள். .01.2026

405

பொருள்: பள்ளிக்கல்வி – டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூர், தரமணி, சென்னை – 2026–2027ஆம் கல்வியாண்டில் மாணவியர் சேர்க்கை மேம்படுத்துதல் – அரசு பள்ளிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் – அனுமதி அளித்தல் தொடர்பாக.

முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் பெறப்பட்டது 29 JAN 2026 வேலூர் - 632009

பார்வை: 1. தொழில்நுட்பக் கல்வி ஆணையரது கடித எண்.944/ஐ-1/2025, நாள்.10.01.2026.
2. முதல்வர், டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக்கல்லூரி, கடித ந.க.எண்.73/அ3/2026, நாள்.19.01.2026.

---

பார்வை1ல் காணும் தொழில்நுட்பக் கல்வி ஆணையரது கடிதத்தில் பெண்களின் (மேம்பாட்டிற்காக) உயர் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் முனைவு பயிற்சிகளை வழங்கும் முக்கிய பங்கேற்பாளராக 1962-ல் துவங்கப்பட்ட பழமையான சென்னை, தரமணியில் துவங்கப்பட்ட டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி (தன்னாட்சி) செயல்படுகிறது எனறும் இக்கல்லூரியின் 2026–2027 கல்வியாண்டில் புதியதாக மாணவியர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தர ஏதுவாக Diploma in Internet of Things (IoT) மற்றும் Diploma in Digital Manufacturing Course துவங்கப்பட்டுள்ளது. இதில் மாணவியர் சேர்க்கை அதிகரித்தல் தொடர்பாக அரசு உயர்நிலை மற்றும் அதை சார்ந்த வேலை வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வை அரசு பள்ளிகளுக்கு சென்று காணொளிக் காட்சி மூலமாக ஏற்படுத்த கேட்கப்பட்டுள்ளது.

எனவே மாணவியர் சேர்க்கை அதிகரித்தல் தொடர்பாக அரசு உயர்நிலை மற்றும் அதை சார்ந்த வேலை வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வை அரசு (ம) அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் சுயநிதி பள்ளிகளுக்கு சென்று காணொளிக் காட்சி மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்த தங்கள் மாவட்டத்தில் உள்ள அரசு பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் மற்றும் பேராசியர்களை அனுமதிக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்: ஆணையர், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், கிண்டி, சென்னை-600 025.
அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
நகல்: முதல்வர், டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி, தரமணி, சென்னை-600 113